# அருட்கரம் தேடி

அருட்கரம் தேடி உன் ஆலயப்பீடம்
அலையலையாக வருகின்றோம்
அருவியாய் வழியும் உன் அருளினில் நனைய
ஆனந்தமாக வருகின்றோம் (2)

ஆயிரம் ஆயிரம் ஆசைகளால்
ஆடிடும் ஓடமாய் எம் வாழ்க்கை (2)
மூழ்கிடும் வேளையில் எம் இறைவா
உம் கரம்தானே எம்மைக் கரை சேர்க்கும்
பெரும் புயலோ எழும் அலையோ
நிதம் வருமோ ஒளியிருக்க (2)
நாளுமே எம்மைக் காத்திடும் உந்தன்

அருட்கரம் தேடி உன் ஆலயப்பீடம்
அலையலையாக வருகின்றோம்
அருவியாய் வழியும் உன் அருளினில் நனைய
ஆனந்தமாக வருகின்றோம்

ஆறுதல் வேண்டும் எம் இதயங்களோ
அன்பினைத் தேடி அலைகின்றதே (2)
தேற்றிட விரையும் எம் தலைவா
உம் தெய்வீகக் கரம்தானே எமைத் தேற்றும்
கொடும் பிணியோ வரும் பரிவோ
துயர் தருமோ துணையிருக்க (2)
நாளுமே அன்பால் ஆறுதல் வழங்கும்

அருட்கரம் தேடி உன் ஆலயப்பீடம்
அலையலையாக வருகின்றோம்
அருவியாய் வழியும் உன் அருளினில் நனைய
ஆனந்தமாக வருகின்றோம் (2)